(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 164.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 ஜூலை 10, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

சமூகமளித்தோர்:

கௌரவ **(டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

கௌரவ **(டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ **(திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ **கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ **கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

கௌரவ **ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **(கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

கௌரவ **(திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **(கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

கௌரவ **அர்கம் இல்யாஸ்,** வலுசக்தி பிரதி அமைச்சர்

கௌரவ **நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

கௌரவ **எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

கௌரவ **ரீ. பீ. சரத்,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ ரொஷான் அக்மீமன

கௌரவ அஜித் அகலகட

கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம

கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ கே.இளங்குமரன்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி

கௌரவ உபுல் கித்சிறி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி

கௌரவ மனோ கணேசன்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ டி.வீ. சானக

கௌரவ குமார ஜயகொடி

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர

கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்

கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்

கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ

கௌரவ தேவானந்த சுரவீர

கௌரவ கிட்ணன் செல்வராஜ்

கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ

கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி

கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி

கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர

கௌரவ தினேஷ் ஹேமந்த

கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்

கௌரவ ரியாஸ் பாருக்

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார் :—

"'நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 (2) இன் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பின்வரும் உறுப்பினர்களை நான் மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன் :-

கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல

கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்ஹ

கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர"

2. **பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2025 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2025 ஆம் ஆண்டுக்கான உயர் நீதிமன்ற நீதியரசர்களின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தேர்தல் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை;

(ii) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை; மற்றும்

(iii) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 யூன் 15 ஆம் திகதிய 2493/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 யூன் 18 ஆம் திகதிய 2493/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்—

(i) 2025 ஆம் ஆண்டுக்கான சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வெகுசன ஊடகப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2025 ஆம் ஆண்டுக்கான அரசாங்க தகவல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர், 2025 ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர், 2025 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர், 2025 ஆம் ஆண்டுக்கான வலுசக்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) சுற்றாடல் அமைச்சர், 2025 ஆம் ஆண்டுக்கான வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்—

(i) 2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொலிஸின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2025 ஆம் ஆண்டுக்கான குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான டவர் மண்டப அரங்க மன்றத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்: அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவுஸ்திரேலியாவிற்கான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் திருப்பிச் செலுத்தலில் இடம்பெற்ற இணையக் குற்றத்துடன் தொடர்புடைய மோசடி தொடர்பிலான அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கையை சபையின் விசேட அனுமதியுடன் ஆங்கில மொழியில் மாத்திரம் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:

(1) எல்பிட்டிய, குருந்துகஹ, தானாயம் கந்த, இல. 351/1 இல் வதியும் திரு. எல்.ஏ. சுசந்தவினது 2025.12.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கயந்த கருணாதிலக்க சமர்ப்பித்தார்.

(2) (i) பொல்கஸ்ஓவிட்ட, ரிலாவல, ஸ்ரீ சரணங்கர வீதி, இல. 25/எச்/7 இல் வதியும் திரு. எச்.பி.ஐ.யூ.கே. கருணாதீரவினது 2026.02.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) பண்டாரகம, பமுனுமுல்ல, தொட்டுப்பொல வீதி, இல.38 ஜீ யில் வதியும் திரு. டப்ளியூ.ஜி.ஜி.பீ. ராஜபக்ஷவினது 2026.02.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ அஜித் பி. பெரேரா சமர்ப்பித்தார்.

(3) (i) நாகலுகமுவ, சீனிமோதர, கொட்டஅம்பகஹவத்த எனும் முகவரியில் வதியும் திருமதி ரீ.எச். ரோஹினி தீபிகாவினது 2025.07.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) பொல்கஹவெல, மெட்டிகும்புர, பொல்பிட்டிய, பாடசாலை வீதி எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ.என்.யூ.எல். கருணாரத்னவினது 2025.07.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ டி.வி. சானக சமர்ப்பித்தார்.

(4) கம்புறுபிட்டிய, லேனபட்டுவ, சமந்தி எனும் முகவரியில் வதியும் திரு. ஆர். சுமனதாசவினது 2025.07.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம சமர்ப்பித்தார்.

(5) கலேவெல, பட்டிவெல, ரத்மலகால, இல. 194/1 இல் வதியும் திரு. எச்.ஏ.ஏ. நயனாநந்தவினது 2025.10.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுனில் பியன்வில சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

(மு.ப. 11.37 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

5. பாராளுமன்ற அலுவல்கள்: பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் மற்றும் 7 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய மடுவன்வெல பிரபுமனை (வலவ்வ) முதற்கொண்டு இலங்கையில் புராதன பெறுமதி வாய்ந்த தலங்களைப் பாதுகாத்தல்: கௌரவ சந்தன தென்னகோன அனுவதிக்க, கௌரவ உபுல் கித்சிறி பின்வருமாறு பிரேரரித்தார்,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான மடுவன்வெல பிரபுமனை முதற்கொண்டு இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான புராதன பெறுமதி வாய்ந்த தலங்கள் காணப்படுவதாலும், இத்தலங்கள் சுற்றுலா ஈர்ப்பைக் கொண்டுள்ளதாலும், தற்போது இவை கடுமையாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாலும், இவற்றின் மரபார்ந்த தொன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாத்து அத்தகைய தலங்களுக்குச் சொந்தமான காணிகளை துரிதமாக அளவை

செய்தும் நிர்ணயம் செய்தும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்த அவற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.(பா.55/2025)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் (Student Counsellor) ஒருவரை நியமித்தல்: கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே அனுவதிக்க, கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ பின்வருமாறு பிரேரரித்தார்,— தற்போது பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு உளவியல் சார்ந்த பின்னடைவுகள் காணப்படுவதனாலும், இந்த நிலைமைகள் அவர்களின் உடல் மற்றும் சமூக இருப்பில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கென பாடசாலை உளவள ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவியில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளடங்குவதன் காரணமாக இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்ற சேவைகள் பயனுறுதிமிக்கவாறு கிடைக்கப்பெறாமையினாலும், சகல பாடசாலை களிலும் உளவள ஆலோசகர் ஒருவரின் அவசியத்தன்மை எழுந்துள்ளதனாலும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் ஒருவரை நியமனஞ் செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.(பா.58/2025)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. "ரட்டவிருவன்" (புலம்பெயர் வீரர்கள்) என்றழைக்கப்படும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்தல்: கௌரவ ஜே.சீ. அலவத்துவல அனுவதிக்க, கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன பின்வருமாறு பிரேரரித்தார்,— இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் விசேடமானது என்பதனாலும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் பல வருட காலமாக தொழில் செய்த பின்னர் இலங்கைக்கு மீண்டும் வந்து தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்கின்றபோது ஒரு சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான ஆற்றல் இல்லாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனாலும், அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து குறித்ததொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபித்து, ஓய்வூதியத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.(பா.59/2025)

(பி.ப. 1.59 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9. இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பிலுள்ள உணவகங்களில் மாணவர்களுக்கு பாதகமான உணவு வகைகளை விற்பனை செய்வதை நிறுத்துவதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்: கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன அனுவதிக்க, கௌரவ ருவன்திலக்க ஜயகொடி பின்வருமாறு பிரேரரித்தார்,— இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் பரவலாக கண்டறியப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாலும், நீரிழிவு நோய்க்கு உணவு வகைகளுடன் உணவுப் பழக்கம் மற்றும் உணவு முறை ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் பாடசாலை கட்டமைப்பில் அமைந்துள்ள பாடசாலை உணவகங்களில்

நீரிழிவு நோய்க்கு காரணமாகவுள்ள சீனி மற்றும் மா கலந்த உணவுகளுடன் பிரைட் ரைஸ், கொத்து, துரித நூடில்ஸ் போன்ற உணவு வகைகள் பெருமளவில் மாணவர்களுக்கு விற்கப்படுவதாலும், எமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பாடசாலை உணவகங்களில் விற்கப்பட வேண்டிய உணவு மற்றும் பான வகைகள் தொடர்பாக அரசாங்கம் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.(பா.61/2025)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்: கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா அனுவதிக்க, கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி பின்வருமாறு பிரேரரித்தார்,— இலங்கையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்நாட்டின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், யாழ்ப்பாணத்தை ஒரு உயிர்ப்பான கலாசாரப் பயண முடிவிடமாக மாற்றமுடியுமென்பதால், யாழ்ப்பாணமும் இலங்கையின் வட மாகாணமும் பிரதான கேந்திர இடங்களாக அங்கீகரிப்பதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பிரதேசத்தின் ஹோட்டல்கள், உணவு விடுதிகள் மற்றும் சேவை வழங்குநர்களுடன் இணைப்பை ஏற்படுத்தல், உண்மையான சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்தல், இலங்கையின் வட மாகாணத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் அவர்களின் திருப்தியையும் அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் இணைப்பு மற்றும் விற்பனையை மேம்படுத்துகின்ற கொள்கைகள் மற்றும் முதலீடுகளுக்காக ஆதரவளிக்கின்ற, பிரதேசத்தில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்பாட்டாளர்களை வலுவூட்டுகின்ற மற்றும் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்தும் சுற்றுலாத்துறைச் சேவை வணிகத்தை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு வசதியளிப்பதன் மூலமும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சுற்றுலா கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தி மற்றும் பொருளாதார விருத்தியை மேம்படுத்துகின்ற அரச-தனியார் பங்காண்மையை மேம்படுத்துவதன் மூலமும் 12 முதல் 18 மாதங்களில் நிலைபேறான பொருளாதாரப் பயன்களை அடைந்துகொள்ளும் இலக்கை நோக்காகக் கொண்டு பிராந்தியத்தின் தொழில் மற்றும் வணிக வாய்ப்புகள் மீது அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை கண்காணிப்பதனூடாக யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்ட சுற்றுலா தளமொன்றை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.(பா.70/2025)

“கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்குவாராக” என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.21 மணிக்கு கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11. ஒத்திவைப்பு (இலங்கையை உலகின் முன்னணி சுற்றுலாப்பயண முடிவிடமாக ஆக்குவதற்கான தேசிய வேலைத்திட்டம்): “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 4.27 மணிக்கு பாராளுமன்றம் 2026 யூலை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினரால் ஒத்திவைக்கப்பட்டது.